2MS

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2022

www.Padasalai.Net

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

0417

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

### பகுதி - I

7 X 1 = 7

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" - இதில் மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணயும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

2. இரு நாட்டு அரசர்களும் தும்பைப்பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ................ .
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

3. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா.பொ.சி. கருதியது ........ .
அ) திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம் இ) புறநானூறு ஈ) கம்பராமாயணம்

4. புறப்பொருள் எத்தனை வகைப்படும்?
அ) பத்து ஆ) பன்னிரெண்டு இ) ஆறு ஈ) ஏழு

5. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் இவ்வடி குறிப்பிடுவது ...................... .
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடைமாறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

6. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .................. .
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

7. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
அ) அதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

### பகுதி - II

**II எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3 X 2 = 6

8. ***விடைக்கேற்ற வினா அமைக்க.***
1) தமிழ் மரபியல் 'பொன் ஏர் பூட்டுதல்' என்ற பண்பாடு உள்ளது.
2) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்.

9. மெய்க்கீர்த்தி பாடுவதன் நோக்கம் என்ன?

10. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

11. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

12. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

### பகுதி - III

**III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2X 3= 6

13. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

14. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

15. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

## பகுதி - IV

**IV எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 3 X 2 = 6

16. ***மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.***

'கண்ணும் கருத்தும்'

17. ***கலைச் சொல் அறிவோம்.*** 1) Belief - 2) Document -

18. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.

அ) புதுக்கோட்டை ஆ) கோயம்புத்தூர் இ) தஞ்சாவூர் ஈ) உதகமண்டலம்

19. ***பேச்சு வழக்கு சொல்லை எழுத்து வழக்கமாக மாற்றுக.***

'ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும்'.

## பகுதி - V

**V கட்டாய வினா.** 1 X 5 = 5

20. ***மனப்பாடப் பாடலை அடிமாறாமல் எழுதுக.***

"தூசும் துகிரும் ............ எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

## பகுதி - VI

**VI எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2 X 5 = 10

21. பழங்காலக் கல்வெட்டுகளைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் உங்களால் இயன்ற செயல்களை எழுதுக.

22. ***தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.***

மூவேந்தர்களால் நாற்றிசையும், போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே! தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணையே! ஐந்திணைகளையும் அழகுற தந்தாய். அதனால் நாணிலத்தில் உன் பெருமை எட்டுத்திக்கும் பரவி நிற்கிறது.

23. ***அலகிட்டு வாய்பாடு.***

குறளைப் பிரித்து அலகிட்டு வாய்ப்பாடு எழுதுக.

"குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு"

## பகுதி - VII

**VII எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2 X 5 = 10

24. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

25. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

26. 'மங்கையராய்ப் பிறப்பதற்கே' என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள சாதனைப் பெண்மணிகள் இருவரைப் பற்றி எழுதுக.

Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com